## **Chapter - 7 .1.3 - Final**
## **Speech for 13-November-2021**

சென்ற இரண்டு கூடல்களில் -அகந்தையின் பிரிவினை பார்க்கும் பரிமாணத்தை - திசைமாற்றி - நம் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தலாம் என்று இரண்டு முறைகளைப் பற்றிய என் கருத்துக்களைப் பகிர்ந்துக் கொண்டேன். இன்று இந்த அத்தியாயத்தின் கடைசி மூன்று theme களான

1) அகங்காரத்தால் தீர்மானிக்கப் படுகின்ற எதிர் வினைகள் அகலும் போது உண்மையான பண்புகள் வெளிப்படுகின்றன.
2) தனிமனிதனை பிரபஞ்சத்திலும், ஜடத்தை ஆத்மாவிலும் மீட்டெடுக்க வேண்டும்.
3) பிரபஞ்சத்திற்கும், இறைவனுக்கும் தனி மனிதன் தன்னைத் திறப்பதால் அகங்காரம் கரைகிறது
ஆகியவற்றை எடுத்துக் கொள்கிறேன்.

இதில் இறைவனுக்கு தனி மனிதன் தன்னைத் திறப்பதால் அகந்தை கரைகிறது என்பதை, அன்னைக்கு நம்மைத் திறக்க வேண்டும், அன்னையின் சித்தத்திற்குள் செல்ல வேண்டும் . அன்னையின் பாதுகாப்பிலேயே இருக்க வேண்டும். அதன் மூலம் நம் அகந்தை கரைகிறதோ இல்லையோ, வெளியே வராது. ஓரளவுக்காவது நம் சுபாவம் திருவுருமாறும் என்று கூறி அதற்காக கர்மயோகி அவர்கள் தந்த சில வழிமுறைகளைக் கூறியிருந்தேன். அதனால் மீதமுள்ள இரண்டு theme - களைப் பற்றிய என் சிந்தனைகளை இன்று பகிர்ந்துக் கொள்கிறேன்

நம் அகந்தையின் பிரித்தறியும் சக்தியை ஆக்கப்பூர்வமாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று கூறும் போது - என்னதான் முயன்றாலும் – அகந்தை- தன்னை முன்னிலைப்படுத்துவதை நிறுத்தாது. பரந்து விரிந்து பார்பதாகத் தோன்றினால் கூட அது தன் interest, தன் idea , தன் சுயநலம் அல்லது தான் உயர்ந்தவன் என்ற நிலையில் சிந்தித்துப் பார்க்கும் நிலையிலேயே இருக்கிறது. அடிக்கடி நான் சொல்லும் லஞ்சத்தின் நிலைகளை correspondence -இல் பார்க்கும் போது - அவனிடத்தில் இருந்தால் நானும் அதையே செய்வேன், அவன் நிலைக்கு அது சரியே என்பது போன்ற மனப்பான்மையை எடுத்துக் கொள்வோம். உற்று கவனித்தால் அதில் நான் உயர்ந்தவன் என்னும் நிலை இருக்கும். இருக்க வேண்டிய மனநிலை -

பார்க்கவேண்டிய correspondence என்று கர்மயோகி அவர்கள் கூறுவது - நான் prosperity -ஐ தேடுவது போலவே - அதற்காக எதையும் செய்வேன் என்ற மனநிலையே - அன்னை உட்பட எதையும் அதற்காக உபயோகப் படுத்திக் கொள்வேன் என்னும் மனப்பான்மையின் வெளிப்பாடு தான் அது என்று நம்மால் உளமாற யோசிக்க முடியாது. அதே போல நாம், அடக்கம், புண்ணியம், பரோபகாரம், உதவி என்று பல உயர்ந்த நிலைகளை நினைக்கவும், செய்யவும் செய்தாலும் - அங்கும் உற்று கவனித்துப் பார்த்தால், அது தான் விரும்பும் வழியையே அது தேர்ந்தெடுக்கும். தனக்குப் பிடிக்காத உயர்ந்ததை, தெரிந்தாலும் எடுத்துக் கொள்ளாது. அதற்கு பிடிக்காத, ஒத்துவராத அல்லது அதை திருப்திப்படுத்தாத விஷயங்களை பிரித்து அது தன் ஒருமைக்கு பயன்படுத்திக் கொள்கிறது.

சுருக்கமாகச் சொல்வதானால் ஒவ்வொரு விஷயத்திலும் உயர்ந்த உண்மை எது, உயர்ந்த சித்தம் எது - என்று தெரிந்த பிறகு, அபிப்ராயத்திலிருந்து வெளியே வருமே தவிர, அதன் சாரத்தில் இருந்து வெளியே வராது. உதாரணமாக அன்னை ஒரு செயல்படும் சக்தி, பரிணாமத்தில் முன்னேற உதவும் ஒரு சக்தி என்று நாம் புரிந்துக் கொண்டாலும், அதன் சாரமாக நம்மால் படம், பூ, ஊதுவத்தி, சாம்பிராணி என்று கடவுளாக, கடவுளுக்கான சாரமாக நாம் கொண்டவற்றிலிருந்து நாம் வெளியே வர அகந்தை உதவுவதில்லை. இதைத் தான் சமர்பணத்தையும் நானே செய்கிறேன் என்று அகந்தை கூறும் இடங்களை நாம் கண்டறிய வேண்டும் என்கிறார்.

உண்மை அல்லது சத்தியம் எது என்று தெரிந்தாலும் - நான் நினைத்த , அறிந்த உண்மையே சரி என்னும் மனநிலை அது. இந்த சூழ்நிலைக்கு சரி வராது என்றோ, தனக்கு வசதியான உயர்ச்சட்டங்களையே எடுத்துக் கொண்டு நான் அன்னை வழிப்படி நடந்தேன் என்று கூறும். ஒரு பிரார்த்தனை செய்தால் கூட அன்னை அதை எப்படி செய்ய வேண்டும் என்று அனைத்து வழியையும் சொல்லிவிட்டு, அதை சமர்ப்பணம் என்று கூறும். முழு எதிர்பார்ப்புடன் இருந்துக் கொண்டே, Thy Will என்று கூறும். இந்த இடங்களை நாம் கண்டுக் கொள்ள நமக்கு ஒரு உயர்சித்தம் தேவைப்படுகிறது. உயர்ந்த பண்பிலும் பிரிவினை பார்க்கும் அகந்தையை- சரி என்று தெரிந்தும், அதைச் செயல்படுத்த தயங்கும் அகந்தையை, செயல்படுத்த முடியவில்லையே என்று வருந்தும் அகந்தையை இணக்கத்தீர்வுக்குக் கொண்டு வர அந்த முழுமைக்குள் செல்ல, அதன் மூலமும் நாம் தேடுவது - ஒருமையையே என்று புரிய - நாம் நம்மை உயர்சித்ததிற்கு திறக்க வேண்டும். அகந்தையின் இத்தகைய எதிர்வாதங்கள் ஒருமைக்கானவை என்று புரியும் போது, அதன் உண்மையான

உயர்பண்புகள் வெளியே வரும். அந்த இடத்தை இறைவன் இருக்கும் இடம் என்கிறார் கர்மயோகி அவர்கள். That junction has Divine sanction என்கிறார். அது Divine Consciousness ம் - ego Consciousness ம், அதாவது இறை சித்தமும், அகந்தையும் சந்திக்கும் இடம். அகந்தை தன்னை அறியும் இடம். ஆரம்பத்தில் சொன்னது போல அகந்தையை இறை பண்புகளை நோக்கித் திருப்பும் போது சிந்தனை தேவைப்படுகிறது. அதன் பிறகு சிந்தனை கூடாது என்னும் நிலை வருகிறது. இரண்டும் சந்திக்கும் இடம், சிந்தனை ஏன் தவறு, ஏன் சிந்திக்கக் கூடாது அல்லது எப்படி சிந்திக்க வேண்டும் என்னும் கேள்விகள் எழுமிடமாக அந்த சந்திப்பு, junction இருக்கிறது. அது அகந்தையின் திருவுருமாற்ற நிலை. Ego is the transition stage between unconsciousness and consciousness என்பதால் நாம் அகந்தையை அறியாமையின் பகுதியாகப் பார்க்கிறோம். ஆனால் அது அறிவின் பகுதி, அறிவிலிருந்து அறியாமைக்குச் செல்லும் பாதையில் இருக்கிறது. அல்லது இரண்டும் சந்திக்கும் இடத்தில் இருக்கிறது என்பதை கவனிப்பதில்லை. அதனால் நாம் நினைத்தால், முயன்றால், நம்மால் அறியாமைக்குச் செல்லாமல் ஞானத்தை நோக்கியே இருக்க முடியும்.

நடைமுறை உதாரணமாக இதன் அடையாளங்களை பார்க்க வேண்டுமென்றால், நாம் ஏன் இப்படி இருக்கிறோம் என்று தோன்றும் இடங்கள், பொழுது போகவில்லை, போரடிக்கிறது என்னும் இடங்கள், அர்த்தமற்ற வேலைகளை செய்யும் நேரங்கள், திறமை குறைவு, அறிவு குறைவு ஆகியவற்றால் பிரச்சனை வரும் இடங்கள் ஆகியவற்றை கவனித்தால், நாம் இத்தகைய junction-இல் சந்திப்பில் இருப்பது தெரியும். நம் அறியாமை, நம் வரையறை, நம் இயலாமை நமக்குத் தெரியும் போது, அதை ஒட்டிய அறிவும் நமக்குத் தெரியும் என்பதே உண்மை. ஆனால் அதை கவனிப்பதில்லை. கவனித்தாலும் அதை நாம் செய்வதில்லை. காரணம் நம் அகந்தை தன் சுகம் தரும் இடங்களை - comfort zone -ஐ விட்டு வெளியே வர விரும்பவில்லை என்பது தெரியும். பொதுவாக நாம் சொல்வது எனக்குத் தெரியவில்லை, என்னால் முடியவில்லை என்று சொல்வோம். அத்தகைய இடங்கள் எல்லாம் உண்மையில் செய்ய விருப்பபடாத இடங்கள். உயர்ந்தது எது, என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்தும் செய்யாத இடங்கள்.

நாம் ஞானம் பெறவும், திருவுருமாற உதவுவதும் அகந்தையே என்பதை நம்மால் ஒத்துக்க கொள்ள முடிவதில்லை. அதை ஒத்துக் கொள்ள - பிரம்ம நோக்கமான பரிணாமத்திற்குள் செல்ல - அகந்தையிலிருந்து ஆன்மாவிற்குச் செல்ல - பிரபஞ்ச சூழல் மூன்று வழிகளில் நம்மிடையே வருகிறது. முதலில் ஒரு பிரச்சினை, ஒரு முரண்பாடு, அல்லது ஒரு துன்பத்தின் மூலம் அது

வருகிறது.. II நாம் அதன் அடிப்படை காரணமாக ஒன்றை எடுத்துக் கொள்கிறோம். பின் நம் அறிவு, அனுபவத்தை ஒட்டி ஒரு பொதுக் காரணத்தை எடுத்துக் கொள்கிறோம். அது நம் மனநிலை, அபிப்ராயங்களை ஒட்டியே பெரும்பாலும் இருக்கும். அதற்கு அடுத்த நிலையில் - நாமறிந்த உயர் சித்தத்தின் சட்டங்களின் படி பார்க்கும் போது, முதலில் நமக்கு ஒரு நடைமுறை விளக்கம் தென்படுகிறது. அது அந்த நிகழ்வின் பின்னால் உள்ள உண்மைகள், pre-existent truth என்பதைத் தெரிந்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளுகிறது. அது நம் உயரசித்ததிற் கு, அல்லது ஆன்மாவின் நோக்கத்திற்கு ஒரு விளக்கத்தை தெரிவிக்கிறது. இதற்கும் அடுத்த நிலையில் , Super mind நிலையில் conscious ஆகப் பார்க்கும் போது அதில் உள்ள supreme truth புரிகிறது. அது ஏன் நடந்தது என்று புரிகிறது.

இதற்கு உதாரணமாக மீண்டும் சென்னை வெள்ளத்தின் போது என் அனுபவத்தையே எடுத்துக் கொள்கிறேன். பல முறை பல விதமாக பேசிவிட்டதால் - இந்த நோக்கில் - context -இல் சுருக்கமாகச் சொல்கிறேன். முதல் நிலையில் வெளிப்படையான காரணமாக தொடர் மழை, முன்னறிவிப்பில்லாமல் ஏரி திறக்கப்பட்டது போன்றவற்றை எடுத்துக் கொண்டேன். அதற்கு அடுத்த நிலையில் அதற்கு சில மாதங்களுக்கு முன் தான் வீட்டை centre போல பெரிய படங்கள் வைத்து மாற்றினேன். அது பிடிக்காதவர்கள், முரண்பாடானவர்கள், பிற விரும்பத்தகாத negative மனிதர்கள் , குறிப்பிட்ட ஒருவரின் subconscious மீதெல்லாம் பழியைப் போட்டேன். அடுத்த நிலையில் அதுவும் திருப்தியான பதிலை தராத போது, - காரணம், அதில் பாதிக்கபடாதவர்களும் நிறைய பேர் இருந்தார்கள், ஏன் என் appartment -இல் groud floor -இல் இருந்தவர்களில் எனக்கு தான் அதிக பாதிப்பு - என் எதிர் flat நபருக்கு கூட அதிக பாதிப்பில்லை. மாடி flat-களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. அப்படி என்றால், எனக்கு வந்ததற்கு காரணமென்ன? என்று யோசித்த போது இத்தகைய சந்திப்பில், அதாவது, அறிவு-அறியாமை, இரண்டுக்குமான சந்திப்பில், அன்னை என்னை இரண்டு ஆண்டுகள் வைத்திருந்தும், அறிவை நோக்கி என்னை நான் திருப்பாமல் இருந்தது என்று தெரிந்தது.

அதற்கு அடுத்த நிலையில் ,supermind பார்வையில் தறிகெட்டு ஓடிய என் அகந்தையை, ஆன்மாவை நோக்கி திருப்பவே, என் வாழ்க்கை முறை என்னவாக இருக்க வேண்டும் என்னும் ஞானத்தைத் தர, ஞானக் கண்ணை திறக்கவே இது வந்தது எனப் புரிந்தது. இதையெல்லாம் தாண்டி pre-existent truth -ஐ உணர உள்ளுறை உண்மை, உள்ளுறை ஞானதைப் பெற truth by identity - அந்த சம்பவத்தில் ஒன்றுவது - தானே சமர்ப்பனமாவது என்னும்

நிலையைச் சொல்கிறார். அது அகந்தை தன் சக்தியை, அனைத்து சக்தியை, சிந்திக்கும் சக்தியைக், பிரிவினை பார்க்கும் சக்தியை  கூட இழக்கும் நிலை. அது தானே ஞானத்தை தரவல்லது.  ஆன்மாவை நோக்கித் திருப்பவல்லது என்கிறார். அந்த நிலையைத் தந்தது - கர்மயோகி அவர்கள் எனக்கு எழுதி அனுப்பிய திருக்குறள். அவர் வேறு எதை எழுதி அனுப்பியிருந்தாலும், அது பற்றியே  என் சிந்ததினையோட்டம் இருந்திருக்கும். அது என் அனுபவம், அன்னையைப் பற்றிய படிப்பறிவு, சட்டங்கள், முன்முடிவுகள் , அபிப்ராயங்கள், இது எல்லாவற்றிற்க்கும் மேலாக என்னுடைய mood -ஐ பொறுத்ததாக இருந்து இருக்கும். ஆனால் எனக்குத் தெரியாத புரியாத திருக்குறள் உதாரணதை அனுப்பினார். விளக்கும் கேட்ட போது நீயே புரிந்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன் என்றார். புரிந்துக் கொள்வாய் என்று நம்புகிறேன் என்றார். அடுத்த இரண்டு மூன்று நாட்கள், கடந்து வந்த ஐம்பது ஆண்டுகளையும், அதன் காரணங்களையும் முழுதுமாக புரிய வைத்து - என் வாழ்க்கை, மனநிலை, ஆர்வம், நோக்கம் என்று எல்லாவற்றையும் மாற்றியது. இதையே truth by identity - ஒன்றில் ஒன்றுவது மூலம் உள்ளுறை உண்மையை அறிவது என்று எடுத்துக் கொள்ளலாம்.

அதற்கு சுருக்கமான வழியாக கர்மயோகி அவர்கள் கூறுவது- அன்னையின் சித்தத்தில் ஒன்றுவது - Truth by identifying with Mother - அவருடைய consciousness உடன் ஒன்றுவது. அப்படி நம்மால் முடிந்தால் மூக்கை சுற்றித் தொடுவதற்கு பதிலாக நேரடியாகத் தொடலாம்.  இதற்கும் என் வாழ்விலிருந்தே உதாரணம் கூறலாம்.  கிராமத்தானான, படிக்காத எனக்கும், நகரத்து படித்த ஒரு பணக்கார பெண்ணிற்கும் திருமணம் நடந்தது. அது முதல் திருமணம். அதற்கு ஏற்றார் போல பிரச்சனைகளும், தெலுங்கு பட பணக்கார வில்லனின் மகளை கட்டினால் என்ன கதியோ அந்த அதோகதியும் எனக்கு ஏற்பட்டு, மிகுந்த போராட்டத்திற்கு பின் , அன்னையிடம் வந்த பிறகு விவாகரத்து கிடைத்தது. இது நடந்து ஏழு ஆண்டுகளுக்கு பிறகு வாழ்க்கையின் சமுதாய கூற்றுப்படி நான் successful business man -settle ஆகி விட்டேன் என்னும் போது வழக்கம் போல நண்பர்கள், குறிப்பாக அன்பர்கள் திருமணம் செய்துகொள்ள தூண்டினார்கள். அந்த நினைவை சமர்ப்பணம் செய்தேன். ஒரு சேவை அன்பரை திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பு தானாகவே வந்தது. எனக்குத் தெரிந்த அத்தனை சட்டங்களையும், சூழலையும், ஆராய்ந்து சமர்பணத்தின் மூலம் தான் இது வந்ததா என்று என் அறிவுக்கு தெரிந்தவரை ஆராய்ந்து ஏற்றுக் கொண்டேன். வாழ்வு நன்றாகவே இருக்கிறது என்றே கூறுவேன்.

இது வரை ஞானம் மூன்று விதமாக நம்மை அடையும் முறை.  இந்த வாழ்வு மூலம் ஏராளமான ஞானத்தைப் பெற்றேன் என்பதும் உண்மையே. அதில் பலவற்றை  supermind பார்வையில் பார்த்தேன் என்பதும் உண்மையே.

ஆனால் truth by identity என்னும் போது , அன்னையின் consciousness -ஓடு ஒன்றுவது உள்ளுறை உண்மையை வெளிப்படுத்தும் என்னும் போது தான் நான் ஒரு முக்கியமான இடத்தை கவனிக்காமல் விட்டுவிட்டேன் என்று தெரிந்தது.

அன்னையின் consciousness -ஓடு திருமணத்தை பொறுத்திப் பார்க்கும் போது நான் பெற்ற ஞானம் அதிர்ச்சி அளித்தது.  எவ்வளவோ திருமணம் பற்றி யோசித்து, பேசிய, பிறருக்கு அறிவுரை கூறிய நான், அன்னை திருமணமே வேண்டாம் என்கிறார், இரண்டாவது திருமணம் பரிணாமத்திற்கு எதிரானது என்கிறார் என்பது அப்போது தான் என் அறிவுக்குத் தோன்றியது.  இந்த வாழ்க்கையே நன்றாகத் தான் இருக்கிறது என்றாலும், திருமணம் செய்யாமல் இருந்திருந்தால், கர்மயோகி அவர்களுக்கு இன்னும் அதிக சேவை செய்து இருக்கலாம், அவருடன் இன்னும் அதிகமாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இதற்கே, என்  மனைவி என்னை பற்றி கவலை படவேண்டாம். நீங்கள் செல்லுங்கள் என்று பல முறை கூறியிருக்கிறார். ஆனால் நான் தான் பல முறை, பல காரணங்களால் அத்தகைய முடிவை எடுக்காமல் இருந்திருக்கிறேன்.  இது போன்று அகந்தைக்கும், ஆன்மாவிற்கும் நடுவில் நாம் இருந்தாலும் இரண்டை பற்றியும் தெளிவாகத் தெரிந்தாலும், உயர்ந்த முடிவை எடுப்பதாக இருந்தாலும்,அதையும் அகந்தையின் உயர்வான சித்தத்தின் மூலமே எடுக்கிறோமே தவிர, அன்னையின் சித்தம் எது, அன்னையின் அழைப்பு எது, என்று பார்த்து எடுப்பதில்லை.

இதற்கு இன்னுமொறு உதாரணத்தையும் கூறலாம்.  மூன்றாயிரம் சம்பளத்திற்கு 2004-இல் ஒரு கம்பெனியில் supervisor -ஆகச் சேர்ந்து, 2007-இல் ஒரு லட்சம் பெற்ற போது, அந்த salary certificate , Form 16, போன்றவற்றை கர்மயோகி அவர்களிடம் காட்டி, Blessing வங்கச் சென்ற போது, அதை எடுத்துச் சென்ற அன்பர் வந்து, நீ விரும்பினால் கர்மயோகி அவர்கள் உன்னைப் பார்ப்பார் என்றார். அதன் உண்மை, பூடகம் புரியாமல், மிக நல்லவனாக, அடக்கமானவனாக, பண்பு மிக்கவனாக, ஆத்மார்த்த சிஷ்யனாக இருந்தேன். கர்மயோகி அவர்கள் அன்பர்களை பார்க்காத நேரம் அது. - நான் சொன்ன பதில் -"யாரையும் பார்க்காமல் இருக்கும் அவர் விரதம் என்னால் கெட வேண்டாம் என்று" பவ்யமாக சொன்னேன். மிகப்

பெருமையுடன் வெளியே வந்தேன். அது எவ்வளவு பெரிய அகந்தை, முட்டாள்தனம், என்று இதை கேட்பவர்களுக்கே புரிந்து இருக்கும். ஆனால் அன்று, அப்போது எனக்கு இது தோன்றவில்லை. கர்மயோகி அவர்களின் consciousness உடன் நான் identify ஆகி இருந்தால் - அது அழைப்பு என்று புரிந்து இருந்தால், அவருடன் இருந்த 64 நாட்களே என் வாழ்வில், மனப்பான்மையில், அறிவில் எதிர்பாராத அளவிற்கு மாற்றம் கொடுக்கும் போது, பதினைந்து வருடங்கள் அவர் தொடர்பில் இருந்திருந்தால், என் வாழ்வு எப்படி இருந்து இருக்கும்.

இதற்கு உதாரணமாக அன்னை வாழ்வில் நடந்த சம்பவத்தையும் நான் எடுத்துக் கொள்கிறேன். இங்கு அது பொருத்தமானதாக இருக்குமா என்று தெரியவில்லை. என்றாலும் என் புரிதலுக்கு அது மிகவும் உதவியது என்பதால் அதையும் தருகிறேன். முழு நிகழ்வு நினைவில்லை. ஒரு முறை ஒரு விஷயத்தை பகவான் பேசுவதாக, ஆணையிடுவதாக அன்னை நினைத்த போது, அன்னையிடம் இருந்த சத்தியம் விழிப்பாக இருந்த போது, அன்னை அதனுடன் ஒன்றினார். அப்போது தான் அது பகவான் இல்லை . பகவான் உருவத்தில் வந்த அசுரன் என்பது புரிந்தது என்று ஒரு நிகழ்வைச் படித்திருக்கிறேன்

எந்த அளவிற்கு நாம் சத்தியத்தின் பார்வையில் பார்க்க வேண்டும் என்பதை அது எனக்குப் புரிய வைத்தது. -அப்படி இருக்க முடியவில்லை. -ஒவ்வொரு முறையும், தவறே செய்கிறேன் -என்றாலும், இது வரை unconscious ஆக செய்தது conscious ஆக செய்கிறேன் என்னுமளவிற்காவது நான் பரிணாமத்தில் முன்னேறி இருக்கிறேன் என்றே நினைக்கிறேன் .

இவையெல்லாம் ஆன்மாவின் வேலையை அகந்தை எடுத்துச் செய்வதற்கான அடையாளங்கள். அது புரியவில்லையென்றால்- நமக்கு உயர் நிலைகளோ, உள்ளுணர்வு, உள் குரல், உட்பார்வை எதுவும் புரியாது. அகந்தையின் விருப்பத்தை நாம் உள்ளுணர்வாக, உட்குரலாக, உட்பார்வையாக எடுத்துக் கொள்வோம். இதற்கு அடிப்படை தேவை நம் அகந்தையின் பிரித்தறியும் பரிமாணத்தை நாம் மூன்றாம் மனிதனாக நின்றுப் பார்ப்பது. அது உள்ளுறை ஞானத்திற்கான சூழலை, மனிதர்களைத் தரும். அந்த பார்வை அதிமனப் பார்வையானால் , நாம் அகந்தையின் பிடியில் இருந்து வெளியே வருவோம். ஆன்மாவின் பிடிக்குள் நம்மைத் தருவோம். அதன் மூலம் மனிதன் தன் பகுதியான அறிவிலிருந்து முழுமையான, உண்மையான , சத்தியமான அறிவிற்குச் செல்ல முடியும். அது

பரிணாமத்தில் முன்னேறுவதாகும். அதுவே இறைவனை உள்ளே தேடும் முறை.

ஆனால் நாம் இறைவனை வெளியே, மேலே, எங்கோ, குறிப்பாக வானத்தில் இருப்பதாக நினைப்பதால்- அடிப்படையே நாமும் இறைவனும், வேறு வேறு என்னும் மனப்பான்மையை- சுபாவத்தை ஒட்டி இருப்பதால்- நம் அத்தனை பார்வையும் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டே இருக்கிறது. அப்போது நாம் கண்ட, கேட்ட, சட்டங்களை, நாம் புரிந்துக் கொண்ட அளவிற்கு, ஏற்றுக் கொள்வோமே தவிர நம் உள்ளே உள்ள இறைவனின், குரலை, அழைப்பை , சமிஞ்ஞைகளை நம்மால் கவனிக்க முடிவதில்லை. நம்முள் இறைவனை நோக்கியே இருக்கும். ஒரு வளரும் ஆன்மா இருக்கிறது என்பதை நம்ப முடிவதில்லை. இதை பொதுவான உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால், இந்த அத்தியாயத்தில் உள்ள உதாரணத்தையே சொல்ல வேண்டுமென்றால், சூரியன் எப்படி வந்தது, பூமி எப்படி வந்தது, உயிர்கள் எப்படி வந்தது என்பதெற்கெல்லாம் விஞ்ஞானத்தில் பதில் இருக்கிறது. அவை அனைத்தும் முதல் நிலை, இரண்டாம் நிலை அறிவிற்குள் அடங்கும். ஆனால் ஏன் அப்படி வந்தது என்ற கேள்விக்குப் பதிலில்லை. அது ஒரு சித்ததால் வந்தது என்பதை விளக்க முடியவில்லை. விளக்க முடிந்தால் அது பிரம்ம நோக்கத்துடன் ஒன்றுவது. அது யாருடைய சித்தம், எதற்காக அதைச் செய்வது என்பதை சொல்ல முடிந்தால், அது பிரபஞ்ச நோக்கத்துடன் ஒன்றுவது.

ஆரம்ப நிலையில் அன்னையிடம் வந்த பிறகு ஒரு முன்னேற்றமான வாழ்வு அமைகிறது. பின் எந்திரத் தனமாகவோ, அதிக முன்னேற்றமில்லாமலோ, அல்லது ஒரே நிலையிலேயோ நின்று விடுகிறது. சில நேரம் முன்பை விட பின்னுக்கு சென்று விட்டது போலக் கூட தோன்றுகிறது. அவையெல்லாம் குறைந்த பட்சம் முன்பிருந்த பக்தி, அன்னைக்கான ஆர்வம், அல்லது இது வரை நாம் கடைபிடித்த அன்னை விரும்பிய பண்புகளிலிருந்து விலகி அகந்தையின் பிடிக்குள் வருகிறோம் என்பதற்கான அடையாளம் என்கிறார் கர்மயோகி அவர்கள். அப்படி அபரிமிதமான முன்னேற்றம், வளம் பெற்ற நேரங்களில் - சில நேரம் - வாழ்வோ, மனமோ, உணர்வோ தான் பெற்ற வெற்றிகளை, நிலைப்படுத்த - to stabilise that plane - ஒரு அமைதியான - அதிக முன்னேற்றமில்லாத period என்று தோன்றுமளவிற்கு எடுத்துக் கொள்ளும். அது அந்ததந்த நிலையை ஸ்திரப்படுத்த , to consolidate that plane . ஆனால் அதற்கு அதிக பட்சம் ஆறு மாதத்திற்கு மேல் ஆகாது. அடுத்து வரும் நம் பிறந்த நாளுக்குள்ளோ, அல்லது அன்னையின்பிறந்த நாளுக்குள்ளோ அது நடந்து விடும். அதன் பின், தொடர்ந்த ஆர்வம் காரணமாக வாழ்வு மீண்டும்

உயர வேண்டும். அப்படி இல்லாமல், அதற்கு மேலும் நம் வாழ்வு அதே நிலையில் இருக்கிறது என்றால், நாம் அகந்தையின் பிடியில், அதன் பண்புகளின் பிடியில், அதன் பரிமாணங்களின் பிடியில் போய்க் கொண்டு இருக்கிறோம் என்பது புரிந்து தெளிய வேண்டும். 2008- முதல் 2012 வரை அன்னை விரும்பும் பண்புகள் மூலமே வளர்ந்த நான், அதன் பிறகு, உயர்ந்த பண்புகள் என்று எடுத்துக் கொண்டு செய்தவை - உதாரணமாக வார்த்தை தவறக் கூடாது என்பதற்காகச் செய்தவை, முன்னேற்றத்திற்கு என்று நினைத்து பார்த்து correspondence பார்த்து செய்தவை, மேலும் மேலும் என்னை அகந்தைக்குள் தள்ளியதை நான் அறியவில்லை. உயர் சித்தின் அடிப்படையிலேயே செய்கிறேன் என்று நினைத்தேன் . அவை அனைத்தும் தாழ்ந்த சித்தத்தின் வெளிப்பாடுகள், அவையே நம்மை அதே நிலையில், தீராத பிரச்சனைகளின் நடுவில் வைத்து இருக்கிறது என்பதை சுய பரிசோதனை மூலம் அறிந்து தெளிய வேண்டும் என்கிறார் கர்மயோகி அவர்கள். அப்படி சொல்லும் போது, நாமெல்லாம் நளனைப் போல, ஹரிச்சந்திரனைப் போல இருக்கிறோம் என்று ஒரு வரி எழுதியிருப்பார். நளன், ஹரிச்சந்திரன் எல்லாம் நாம் உயர்ந்தது என்று நினைக்கும் பண்புகளுக்காக வாழ்தவர்களாயிற்றே, ஏன் அப்படி சொல்கிறார் என்று தேடினேன். வேறு கட்டுரைகளில் அதற்கான விளக்கம் எதுவும் இல்லை, என்றாலும் அதை பற்றிச் சிந்தித்த போது அவர்களைப் பற்றி படித்த போது, நான் ஏன் 2008 லிருந்து 2012 வரை பெற்ற வளர்ச்சியை பிறகு பெற முடியவில்லை. ஏன் முன்னேற்றம், மெதுவாக, வேகம் குறைவாக , பல நேரம் தாமதமாக இருந்தது. சுமார் இரண்டு வருடம் ஏன் அதே நிலையில் இருந்தது என்று புரிந்தது.

நள தமயந்தி கதை பெரும்பாலோருக்கு தெரிந்து இருக்கும். அதனால் அதன் சுருக்கத்தை மட்டும் சொல்கிறேன். இந்த கதைச் சுருக்கத்தை தந்த சமர்ப்பனனுக்கு நன்றி.

மகாபாரத்தின் வரும் கிளைக் கதைகளில் நளன், தமயந்தியின் காதல் கதையும் ஒன்று. வன பர்வம் என்ற பகுதியில் இந்தக் கதை வருகிறது பின்னர் தனிக் கதையாக “நைஷதம்” என்ற பெயரில், வடநாட்டில் ஶ்ரீஹர்ஷர் என்பவரால் எழுதப்பட்டது. தமிழில் புகழேந்திப் புலவரின் “நளவெண்பா” என்னும் நூல் பிரசித்தி பெற்றது. வடமொழியிலிருந்த நைஷதம் நூலிலிருந்து அதிவீரராம பாண்டியர், நைடதம் என்ற பெயரில் மொழிப் பெயர்த்திருக்கிறார்.

விதர்ப்ப நாட்டை பீமன் என்றொரு அரசன் ஆண்டு கொண்டிருந்தான். இந்த பீமன் வேறு, பாண்டவர்களில் ஒருவனான பீமன் வேறு. பீம மன்னனுக்கு தமயந்தி என்ற பெண்ணும், மூன்று பிள்ளைகளும் இருந்தனர் .

அயோத்தியை ஆண்ட நிஷாத மன்னனுக்கு நளன், குவரா என்ற இரு மகன்கள் இருந்தனர்.

நளன் அழகானவனாகவும், கல்வி, கேள்வி, சண்டை பயிற்சிகள் உள்ளிட்ட சகல கலைகளிலும் வித்தகனாக திகழ்ந்தான். தமயந்தியும் அழகில் ஈடு இணையில்லாதவளாக வளர்ந்தாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் பார்க்காமலே, கேள்விப்பட்டதன் மூலமே தங்களுக்குள் அன்பை வளர்த்துக் கொண்டனர்.

பருவ வயதையடைந்த தன் மகளுக்கு திருமணம் செய்ய ஆசைப்பட்டார் தமயந்தியின் தந்தை. மகளுக்குண்டான சிறந்த வரனை அவளே தேர்ந்தெடுக்க வேண்டி, சுயம்வரத்திற்கு நாள் குறித்து, எல்லா தேசத்திற்கும் தூது அனுப்பினார்.

இந்திரன் தமயந்தியின் அழகினை பற்றி கேள்விப்பட்டான். தமயந்தியை அடையும் நோக்கில், அவனும் சுயம்வரத்திற்கு புறப்பட்டான். நளனும் சுயம்வரத்தில் கலந்துகொள்ள தேரில் ஏறி விதர்ப்ப நாட்டை நோக்கி சென்று கொண்டிருந்தான். நளன் மீது தமயந்தி காதல் கொண்டிருப்பதை அறிந்த இந்திரனின் குறுக்குபுத்தி வேலை செய்ய, நளனைப்போல உருமாறி சுயம்வரம் நடக்கும் இடத்துக்கு சென்றான். தமயந்தியை குழப்ப மேலும் நான்கு தேவர்களையும் அதே போல உருமாறி வர செய்தான் சுயம்வர ஏற்பாடு வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தது. மன்னர்கள் சபையில் நிரம்பி வழிந்தனர்.

நளனை அவள் கண்கள் தேடின. அங்கே நளன் அழகே வடிவாக கம்பீரமாக இருந்தான். ஆனால், அவனருகே அவனைப்போல் தோற்றம் கொண்ட ஐந்துபேர் இருப்பதைக்கண்டு தமயந்தி குழம்பி போனாள். தன்னுடைய சமயோசித புத்தியை பயன்படுத்தினாள் .

தமயந்தி மணமகனை தேர்ந்தெடுப்பதில் காலதாமதம் செய்து கொண்டே வந்தாள். நேரம் செல்ல செல்ல நளன் கழுத்தில் சூடியிருந்த பூமாலை வாடத் தொடங்கியது. அதேபோல் தேர் ஏறி வந்ததால் சிறிது களைப்புற்றவனாக

காணப்பட்டான். ஆனால் தேவர்கள் அனைவரும் ,வாடாத மலர்மாலைகளுடன் ,மூடாத இமைகளுடன் ,சிறிதுகூட பொலிவு கலையாமல் இருந்தனர் .தமயந்தி இதைப் புரிந்துக்கொண்டு, சரியாக நளனின் கழுத்தில் மாலை அணிவித்தாள்.

சுயம்வரத்தில் தோற்ற சனிபகவானுக்கு நளனின்மேல் தீராத பகை இருந்தது. நளனை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் அரித்து கொண்டிருந்தது. சாஸ்திரங்கள் முழுவதும் கற்றறிந்த நளன் சிறு தவறு கூட இல்லாமல் அரசாட்சி புரிந்து வந்தான். இதனால் சனிபகவான், நளனின் அரண்மனையிலேயே தங்கி தக்க சந்தர்ப்பத்திற்க்காக காத்துகொண்டு இருந்தார்.

ஒரு நாள் நீண்ட பிரயாணத்திற்குப் பின் மிகுந்த சோர்வோடு நளன் அரண்மனை திரும்பினான். எப்போதும் தன் கை,கால்களை நன்றாக தூய்மைப்படுத்தும் நளன், சோர்வின் காரணமாக பாதத்தை முழுமையாக கழுவாமல் அரண்மனைக்குள் நுழைந்து விட்டான். அந்த அழுக்கின் மூலம் அவன் வாழ்வில் சனி பகவான் நுழைந்து விட்டார்.

நளன் சமையலிலும், குதிரை சாஸ்திரத்திலும் பூரண அறிவு பெற்றவன். நளனுக்கு பகடையாட மிகவும் பிடிக்கும். ஆனால் அதில் நளன் முழு திறமை பெற்றவனல்ல. புஷ்கரன் என்ற உறவினன் பகடையாட அழைத்த போது, அவனை பீடித்திருந்த சனிபகவான், நளனை தடுமாற செய்து அவனை சூதாட்டத்தில் மூழ்க வைத்து அவனை அனைத்தையும் இழக்க செய்தான்.

நளன் தருமனைப் போலவே அனைத்தையும் இழந்தான். அவன் மனைவி தமயந்தி மட்டுமே மிஞ்சினாள். ‘அவளை வேண்டுமானால் பணயம் வை. நீ வென்றால் இழந்த அனைத்தையும் திருப்பித் தந்துவிடுகிறேன்’ என்றான் எதிராளி. ‘எதை வேண்டுமானாலும் பணயம் வைப்பேன். தமயந்தியை பணயம் வைக்க மாட்டேன். என் மனைவியின் பெருமைக்கு சிறு குறை ஏற்படவும் ஒப்புக் கொள்ள மாட்டேன். அதற்காக என்னை கோழை என்று பிறர் கேலி செய்தாலும் கவலையில்லை’ என்றான் நளன்.

உடுத்திய ஒற்றை ஆடையுடன் நளனும், தமயந்தியும் நாட்டை விட்டு வெளியேறினர். ‘நான் நல்ல நிலைக்கு மீண்டும் வரும் வரை உன் தந்தையின் அரண்மனையில் சென்று இரு’ என்று நளன் தமயந்தியிடம் கூறினான். 'நான் உங்கள் வாழ்க்கை துணைவி. உங்கள் நல்வாழ்வில் பங்கு பெற்றது போல, சிரமத்திலும் பங்கெடுப்பேன்' என்று தமயந்தி கூறிவிட்டாள்.

ஒரு நாள் நளன் காயப்போட்டிருந்த அவனது ஆடையை, காக ரூபத்தில் வந்து சனி கவர்ந்து சென்றார். வேறு ஆடை இல்லாததால், தமயந்தியின் சேலையில் பாதியை கிழித்து, வேட்டியாக நளன் உடுத்திக் கொண்டான்.

நல்ல உணவு, உடை கூட தன் மனைவிக்கு தர முடியவில்லையே என்று நளன் வருந்தினான். தான் உடன் இருந்தால் தமயந்தி தந்தை வீட்டிற்கு போக மாட்டாள். அவளை விட்டு விலகினால் வேறு வழி இல்லாமல் அங்கு போவாள். வசதியாக வாழ்வாள் என்று முடிவு செய்த நளன், ஒரு நாளிரவு தமயந்தி உறங்கும்போது அவளை தனியே விட்டு தூரமாக சென்று விட்டான்.

கண் விழித்த தமயந்தி, நளன் தன்னை விட்டு பிரிந்ததாய் எண்ணி மிகவும் வருந்தினாள். பின் தன்னை திடப்படுத்திக் கொண்டு, அங்கு வந்த வணிகர் கூட்டத்துடன் அச்சல்புரா நாட்டிற்கு சென்று அங்குள்ள ஒரு பெண்ணின் ஆதரவுடன் அங்கே வசிக்கலானாள் .

நளன் காட்டில் கால்போன போக்கில் சென்று கொண்டு இருந்தான். ஒரு இடத்தில் காட்டுத்தீ எரிந்துக்கொண்டு இருந்தது. அப்பொழுது, அந்த தீயின் நடுவே இருந்து ‘என்னை இந்த தீயில் இருந்து காப்பாற்று’ என்று நாகத்தின் அபயக்குரல் கேட்டது. நளன், அந்த நாகத்தை தீயிலிருந்து எடுத்து தரையில் விட்டான். பாம்புக்கு பால் வார்த்தால், அது பால் தந்தவனையே கடிக்கும் என்பது போல கார்கோடகன் என்ற அந்த நாகம் நளனை தீண்டியது .

‘உன் பேச்சை கேட்டு உனக்கு உதவியது என் தவறுதான். இருந்தாலும் ஆபத்திலிருப்பவரை காப்பது ஒரு மன்னனின் கடமை. அது நிறைவேற்றுவதில் என் உயிர் போவதில் எனக்கு மகிழ்ச்சியே’ என நளன் கூறினான்.

அதற்கு நாகம், ‘எனது கொடிய விஷத்தால் உன்னுள் வாசம் செய்யும் சனிபகவான் பலவித தொல்லைகளை அனுபவிப்பான். அந்த தொல்லைகளை அனுபவிக்கவே அவனுக்கு சரியாய் இருக்கும். அவனால் உனக்கு இனி எந்த புதிய தொல்லையும் இருக்காது. மக்கள் உன்னை அடையாளம் காணாதவாறு உன் உடல் கொடூரமான .தோற்றத்தை அடையும். நீ அயோத்யா ராஜ்யத்தை அடைந்து, இஷ்வாகு வம்சத்தை சேர்ந்த அரசனான சூதாட்ட நிபுணன் ரிதுபர்ணனிடம் செல். நீ ஒரு தேரோட்டி உனது பெயர் பாஹூக்கா என்று சொல்லி நீ அவனிடம் தேரோட்டியாக சேர்ந்துவிடு. அவனுக்கு அஷ்வா ஹிரித்யாவின் நுட்பங்களை கற்றுக் கொடு. சூதாடவும் செய். உன் திறமையைக் கண்டு அவன் உனக்கு நண்பனாவான். அந்த

பகடைமூலமாகவே உன் புகழ் உயர்ந்து, நீ இழந்த வாழ்க்கையையும், உன் மனைவி மக்களையும் திரும்ப அடைவாய். விஷக்கடிக்கு மாற்று மருந்தும், மாற்று ஆடையும் தருகிறேன். நீ விரும்பியபோது உன் சொந்த உருவத்தை அடையலாம்' என கூறி விடை பெற்றது .

நளனும் அந்த நாகம் கூறியபடி, அயோத்யா சென்று ரிதுபர்ணாவிடம் நட்பு கொண்டு அங்கு வாசிக்கலானான். பகடை ஆடும்போது எப்போதும் நளன் தோற்று விடுவான். நளன் மட்டுமல்ல, எல்லோருமே ரிதுபர்ணாவிடம் தோற்று விடுவார்கள். பலர் அவனிடம் தங்களுக்கு ஆட்டத்தின் நுட்பங்களை சொல்லித் தருமாறு கேட்டுக் கொண்டாலும் ரிதுபர்ணா அதை செய்யமாட்டான்.

தமயந்தியின் தந்தை பீம அரசன் நாலா புறமும் ஆட்களை அனுப்பி தேடினான். கடைசியில் அவள் அச்சல்புரா ராஜ்யத்தில் இருப்பதைக்கண்ட வீரர்கள், அவளை தங்கள் நாட்டுக்கு கூட்டி சென்றனர் அங்கே தமயந்தி வசிக்கலானாள். நளனை குறித்த சிந்தனையில் எப்பொழுதும் இருந்தாள். மன்னனும் நளனைத் தேட, எல்லா ராஜ்யத்திற்கும் ஆட்களை அனுப்பினான்.

தமயந்தி நளனைக் கண்டு பிடிக்க ஒரு உபாயம் செய்தாள். நளன் மட்டுமே பதில் சொல்லக் கூடிய கேள்விகளை பாரதமெங்கும் கேட்க சொன்னாள். அதற்கான பதில்களை அயோத்தியாவில் பாஹூக்கா என்ற சமையல்காரன் மற்றும் தேரோட்டி சொன்னான் என்று அறிந்ததும் அவன் நளனாக இருக்கலாம் என்ற முடிவிற்கு தமயந்தி வந்தாள்.

நளனை வெளிப்படுத்த தமயந்தி ஒரு திட்டம் போட்டாள். நளன் காணாமல் போய்விட்டான். அவன் உயிரோடு இருக்கிறானா என்று தெரியவில்லை. அதனால் தமயந்திக்கு மறுதிருமணம் செய்ய சுயம்வர நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்ற செய்தி எல்லா தேசங்களுக்கும் அனுப்பப்பட்டது.

அதில் கலந்து கொள்ள ரிதுபர்ணா விரும்பினான். குறுகிய கால அவகாசமே இருந்ததால், 'சுயம்வரத்திற்கு முன் என்னை எவர் தேரில் கொண்டு சேர்க்க முடியும்?' என்று தன் தேரோட்டிகளை கேட்டான். பிற எவருக்கும் அதை செய்ய முடியும் என்ற நம்பிக்கை வராத போது நளன் தன்னால் அதை செய்ய முடியும் என்றான்.

காலம் குறைவாக இருப்பதால், தமயந்தியின் அழகை பற்றி கேள்விப்பட்ட மன்னன் ரிதுபர்ணன் விரைந்து செல்வதற்காக பாஹூக்கா என்னும் பெயரில் இருக்கும் நளனின் தேரில் ஏறினான்..

நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில், மிகச் சிறப்பாக, வேகமாக தேரை ஒட்டி சென்றான் நளன். அதை பார்த்து வியந்து போன அயோத்யா மன்னன் ரிதுபர்ணா நளனை மனமார பாராட்டினான். 'தேரோட்டும் கலையில் முழுமையான அறிவு இருப்பது போல பகடையிலும் நான் பூரண அறிவு பெற்று இருக்க வேண்டும். அரைகுறை அறிவோடு பகடை ஆட சென்றது தன் பிழை ' என்று நளன் மனதிற்குள் வருந்துகிறான்.

குதிரை செலுத்தும் கலையை முழுவதுமாக உபதேசிக்குமாறு ரிதுபர்ணா நளனிடம் கேட்டான். 'அதற்கு பதிலாக, குருதட்சிணையாக தான் சிறந்து விளங்கும் சூதாட்ட கலையை உனக்கு உபதேசிக்கிறேன்' என கூறினான். ஒருவர் மற்றவரிடம் தங்கள் அறிவை பகிர்ந்து கொண்டனர். அதன் மூலம் இருவரது அறிவு நிலையும் உயர்ந்தது.

ரிதுபர்ணாவின் தேர் வரும் நளினத்தை தன் மாளிகை உப்பரிகையில் இருந்து தமயந்தி பார்த்தாள். ஓட்டுபவன் நளனாக இருக்கவேண்டும் என்று ஊகம் செய்தாள்.

தமயந்தியின் கோட்டைக்குள் நுழையுமுன் ரிதுபர்ணாவிற்கு பசிக்க தொடங்கியது. பல காலமாக நளனின் சமையலை உண்டதால், ரிதுபர்ணா வேறு எந்த உணவையும் உன்ன விரும்ப மாட்டான். எனவே சாலை ஓரமாக தேரை நிறுத்தி, ரிதுபர்ணாவிற்காக நலன் சமைக்க தொடங்கினான். அந்த நறுமணம் நகரமெங்கும் பரவியது. ரிதுபர்ணாவோடு வந்திருப்பது நளனே என்பது தமயந்திக்கு உறுதியாக தெரிந்து விட்டது.

மற்ற மன்னர்களை விட்டுவிட்டு மாற்று உருவில் வந்த நளனுக்கு தமயந்தி மாலை சூடினாள். நளன் தன சொந்த உருவத்தை வெளிப்படுத்தினான்.

அதன் பின், மீண்டும் புஷ்கரனோடு நளன் சூதாடினான். இம்முறை நளன் பூரண வெற்றி பெற்றான். இழந்த அனைத்தும் அவனுக்கு மீண்டும் கிடைத்தன. நளனும், தமயந்தியும் நெடுங்காலம் நிம்மதியாக வாழ்ந்தனர்.

இந்த கதையை வெவ்வேறு கோணத்தில், life response நோக்கில் பார்க்கலாம், என்றாலும், இந்த அத்தியாயத்திற்கு தேவையான இடங்களை மட்டும் எடுத்துக் கொள்கிறேன்.

நளன், நலமான, வளமான வாழ்க்கை, நல்ல, அழகான, புத்திசாலியான மனைவி, அரசரை உளமார விரும்பும்  நல்ல குடிமக்கள் என்று எல்லாவற்றையும் பெற்றிருந்தான் என்றாலும் அவனை அவனது உறவினர், பகடையாட  அழைத்த போது, இவர்களை பற்றி எல்லாம் சிந்திக்காமல், முடியாது, சரியல்ல, எனக்கு சரியாக விளையாடத்  தெரியாது என்பதை சரியான நேரத்தில் சொல்ல முடியாமல், தன் திறமை, வரையறை எது என்று தெரியாமல் ஒத்துக் கொள்கிறான். முதன் முறை தோற்ற போதே விலகாமல், பிடிவாதமாக அகந்தையின் பிடியில் வந்து, தன்னிடம் உள்ளது எல்லாவற்றையும் பணயமாக வைத்து விளையாடுகிறான். எல்லாவற்றையும் தோற்ற பிறகு, தர்மரைப் போல மனைவியை வைத்தும் விளையாடாமல் - மனைவியுடன் நாட்டை விட்டு வெளியேறி காட்டுக்குள் செல்கிறான்.  அங்கு தன்னுடன் சேர்ந்து மனைவி படும் துன்பத்தை பார்க்க முடியாமல், அவளை விட்டு சென்றால், அவளாவது நன்றாக இருப்பாள் என்று ஒரு நாள் இரவு, மனைவி தூங்கும் போது பிரிந்து செல்கிறான்   அப்படி செல்லும் போது தன் தகுதிக்கு மீறிய உதவிகளை எதிர்படுவோருக்குச் செய்கிறான். கார்கோடகன் என்னும் விஷப்பாம்பிற்க்கும் உதவுகிறான். அதற்கு மனிதாபிமானம், தர்மம் என்றும் நினைக்கிறான்.  அந்த விஷப் பாம்பு விட்ட மூச்சால் உடல் முழுதும் மாறிய பிறகு, அதனிடம் அதிலிருந்து நீங்கும் வழியையும் கேட்கிறான்.

நளன் செய்த அனைத்தையும் மேலோட்டமாக பார்க்கும் போது, கர்மம் என்றோ, நல்ல மனப்பான்மை என்றோ, நல்லெண்ணம் என்றோ தோன்றும். ஆனால் அவை அனைத்தையும் உற்று கவனித்தால், அவையனைத்திலும், நளன், தான் உயர்ந்தது என்று நினைத்ததை எந்த பொது புத்தியும் இல்லாமல், எங்கு எதை பயன் படுத்த வேண்டும் என்றுத் தெரியாமல், அகந்தையின் பரிமாணத்திற்குள் சென்று இருப்பதைக் காணலாம். இவையெல்லாம் நற்பண்புகள் என்றாலும், அவை அவனுக்கான நிலையல்ல. அவன்  நல்லவை என்று நினைத்தவை. Misconstrued virtues - தவறாக உணரப்பட்ட பண்புகள் - என்று கர்மயோகி அவர்கள் இதைக் குறிப்பிடுகிறார்.

இது உயர்சித்ததிற்க்காக  உயர் பண்பை ஏற்றுக் கொள்வதல்ல. அகந்தைக்காக தேவையில்லாத challenge-களை ஏற்றுக் கொள்வது. கொடுத்த வாக்கை காப்பாற்றுவது என்பது இங்கு கோழைத்தனம். நம்மை நம்பிய நாட்டு மக்களை கை விட்டது, மனைவியை கை விட்டது கோழைத்தனம் . பொறுப்பேற்றுக் கொள்வதை தவிர்த்து, not -taking responsibility  என்பதை உயந்தது என்று நினைத்து அவன் செய்தது எல்லாம் அகந்தையை திருப் திப் படுத்த செய்த தாழ்ந்த செயல்களே.

நாகம், கலியின் உருவம், சனியின் உருவம், தன் கர்மத்தை அதிகப்படுத்த வந்தது என்று தெரிந்தும் அதற்கு உதவுவது மனிதாபிமானம் என்று நினைத்தது அறியாமையின் உச்சம். அகந்தையின் உச்சம். கார்கோடகன் என்னும் அந்த நாகம் அவன் பெற்ற குறைக்கு, கர்மத்திற்கு தீர்வாக, நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று , நீ ஏதாவது ஒரு விஷயத்தில் நம்பும் போது, செம்மையை நாடும் போது, நீ அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுபடுவாய், என்று கூறியது - பிறகு நடந்தவை கதை சுருக்கத்தில் வந்து விட்டது. இறுதியாக ரிதுப்புர மன்னன் தாயம் விளையாட்டு மற்றும் அதற்கான காய் உருட்டும் முறை, சூட்ஷமத்தை, சூதாட்டத்திற்காகவே இருக்க வேண்டிய மனப்பான்மையை விளக்கியதும், நளனுக்கு அந்த விஷயத்தில் perfection வருகிறது. செம்மை வருகிறது. அவனையறியாமலேயே அவன் செய்த பெரும் தவறு Reverse ஆகிறது. அதன் பின் இழந்த அனைத்தையும் அவன் பெறுகிறான். அதே போல, தவறு என்று தெரிந்தும் நாகப் பாம்பிற்கு உதவி செய்த பிறகு, அதை ஞாயப்படுத்த ‘உன் பேச்சை கேட்டு உனக்கு உதவியது என் தவறுதான். இருந்தாலும் ஆபத்திலிருப்பவரை காப்பது ஒரு மன்னனின் கடமை. அது நிறைவேற்றுவதில் என் உயிர் போவதில் எனக்கு மகிழ்ச்சியே’ என நளன் கூறிய இடத்தில் தான் அவனுக்கான அந்த பிரச்சனையிலிருந்து வெளியே வருவதற்கான வழி அந்த நாகத்தின் மூலமே கிடைக்கிறது. அதே போல, ஒரு நிலைக்கு மேல், தன் கடமை, தன் அதிகாரம் ஆகியவற்றை உணர்ந்து , தன் மனைவியை வைத்து பகடை விளையாடாமல் இருந்ததினால், அவனுடைய துன்பம் அவனோடு முடிகிறது. ஆனால், அந்த நிலை தெரிந்தும், பலர் சொல்லியும், அகந்தையின் பிடியிலிருந்து, மனைவியையும் வைத்து பகடையாடிய யுதிஷ்டிரனால் மிகப் பெரிய பாரதப் போர் ஏற்பட்டு , ஏராளமான ஞானிகள், வீரர்கள், நாடுகள் என்று ஏறத்தாழ, ஐந்தாறு பேரைத் தவிர அனைவரையும் இழக்க நேரிடுகிறது.

நளனும் யுதிஷ்டிரனைப் போல ஒரு மன்னன்தான். சிறு மன்னன். அவனுக்கும் பகடையாட மிகவும் பிடிக்கும். மற்றொரு மன்னன் பகடையாட அழைத்த போது, அதை ஏற்ற நளன் தருமனைப் போலவே அனைத்தையும் இழந்தான். அவன் மனைவி தமயந்தி மட்டுமே மிஞ்சினாள். அவளை வேண்டுமானால் பணயம் வை. நீ வென்றால் இழந்த அனைத்தையும் திருப்பித் தந்துவிடுகிறேன் என்றான் எதிராளி. எதை வேண்டுமானாலும் பணயம் வைப்பேன். தமயந்தியை பணயம் வைக்க மாட்டேன். என் மனைவியின் பெருமைக்கு சிறு குறை ஏற்படவும் ஒப்புக் கொள்ள மாட்டேன். அதற்காக என்னை கோழை என்று பிறர் கேலி செய்தாலும் கவலையில்லை என்றான் நளன். அதன்பின் தமயந்தி சில நாட்களே நளனோடு வாழ்ந்து சிரமப்பட்டாள்.

பின் பத்திரமாக தன் தந்தையின் அரண்மனைக்குச் சென்று வசதியாகவே வாழ்ந்தாள். நளன் தனது தவறான செயல்களினால் சில நாட்கள் சிரமப்பட்டான். சில காலம் சென்ற பின் எந்த உயிரிழப்பும் இல்லாமல் நளனும் தமயந்தியும் இழந்ததை சுமுகமான முறையில் மீண்டும் பெற்று சந்தோஷமாக வாழ்ந்தனர்.

இன்னொரு கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், எப்போதும் செம்மையாக ஒரு விஷயத்தை செய்யும் நளன், அன்று சோர்வின் காரணமாக, காலை சரியாக அலம்பாமல் வந்த அந்த ஒரு கணத்தில், கர்மம், அவனை பிடிக்கிறது. அது போல எவ்வளவு தான் உயர் பண்புகளை ஏற்றுக் கொண்டாலும், ஒரு சிறு தாழ்ந்த சித்தம், தன் வேலையை காட்டாமல் இருக்காது. இன்றைய பாகிஸ்தானின் இந்தியா பிரச்சனைக்கு காரணமாக, அத்தகைய உதாரணம் ஒன்றை கர்மயோகி அவர்கள் கொடுத்திருப்பார் .நடைமுறையில் நாம் ஏற்றுக் கொள்ளும் பண்புகளுக்கு ஏற்ற மனநிலை நம்மிடம் இருக்கிறதா என்று கவனிப்பது முக்கியம்.

இன்னொரு இடம் consciouness வுடன் ஒன்றுவதற்கு உதாரணமாக, தமயந்தி சுயம்வரத்தின் போது பூக்கள் வாடியதையும், வாடாமல் இருந்ததையும், கவனி த்ததை சொல்லலாம்.

எந்த நிலையில் நாம் அகந்தையை விட்டு வெளி வந்தாலும், அந்த நிலையில், நாம் ஆன்மாவின் பிடிக்குள் செல்கிறோம், பரிணாமத்தில் வளர்கிறோம்.

நாம் நல்லது என்று நினைத்து, உயர் பண்புகள் என்று நினைத்துச் செய்வதும், தவறான இடத்தில் செய்யும் போது, தவறானவர்களுக்குச் செய்யும் போது, அது தவறாமல் நம் வாழ்வில் மட்டுமல்ல, நம் சுற்றியுள்ளோர் வாழ்விலும், துன்பமாக, பாடமாக வருகிறது. நாம் அதை கவனிப்பதில்லை. கவனித்தாலும் அறிவு தெளிவானாலும், உள்ளுணர்வு சொன்னாலும், பிற காரணங்களுக்காக அவர்களுடன் தொடர்பில் இருப்போம். இவையெல்லாம் ஆன்மாவின் பண்புகள் அல்ல. அகந்தையின் பண்புகள். அவற்றை reverse செய்யும் வரை நாம் இழந்ததைப் பெற முடியாது, முன்னேற முடியாது.

ஒரு குறிப்பிட்ட நிலை வரை அகந்தை செம்மைக்கு சக்தியையும், முன்னேற்றத்தையும் தரும். மனமும் அறிவும்- அதற்குத் திசையை, Direction - ஐ த் தரும். Self -respect , Self -dependent , initiative போன்றவை அதற்கு உதாரணங்கள், வாழ்வும், மனமும் ஒரே நிலையில், ஒரே plane -இல் இருக்கும் வரை அவை சரியாக இருக்கும். மனம் உயர்ந்த பிறகு, உயர்சித்தத்தை

அறிந்த பிறகு, அல்லது வாழ்வு ஒரு படி உயர்ந்த பிறகு, முந்திய நிலையையே பின்பற்றினால் வாழ்வில் குழப்பம் வரும். உயர்ந்ததும் தாழ்ந்தும் ஒன்றை ஒன்று எதிர்க்கும் போது, ஒன்று இறங்குகிறோம் அல்லது அதே நிலையில் இருக்கிறோம். சென்ற கூடலில் சொன்ன Doctor மற்றும் வக்கீல் உதாரணம் போல lower doing the higher - தாழ்ந்தது உயர்ந்ததின் வேலையைச் செய்யும் போது அந்த நிலை, குழப்பம், முரண்பாடு, துன்பம் தருகிறது.

இங்கு அகந்தை ஆன்மாவின் வேலையை செய்வதால் வரும் பிரச்சனை இது. உயர்நிலை என்பது குறைந்த பட்சம் மனம் energyயை கொடுத்து ஆன்மா direction -ஐ த் தரவேண்டும். அதிகாரமும் பொறுப்பும் இருக்கும் இடம் நமக்கான நிலை என்றால் அதை முன்னிலைப் படுத்தி அதை செம்மையாக செய்வதே - அந்த அதிகாரமும், பொறுப்பும் எதற்காகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிந்து அதை செம்மைப்படுத்துவதே - உயர் பண்பு.

அரசன் முதலில் செய்து இருக்க வேண்டியது அதையே. தன் நாட்டு மக்களுக்கான, மனைவிக்கான , குடும்பத்திற்கான கடமையை செய்வதே இங்கு உயர் பண்பு.

ஒரு ஸ்தாபனத்தின் பகுதியாக அதிகாரம், பொறுப்பு பெற்ற பிறகு, ஸ்தாபனத்தின் நலனுக்கு எதிராக தனி மனிதனின் இச்சைக்கு துணை போவோர் எல்லாம் ஏராளமான பிரச்னைகளோடும், பல ஆண்டு முன்னேற்றம் இல்லாமல் இருப்பதை கவனித்தாலும், அதை ஏற்க நம் அகந்தை விடுவதில்லை. அதை உயர் பண்பு என்றும் நினைக்கிறது. மனதின் பல நிலைகளுக்கு ஏற்ப - அதாவது முனியின் உயர்மனம், ரிஷியின் ஒளி மனம், யோகியின் நேரடி ஞானம், அதி மனம் என்று எல்லா மனதிற்கும் காலத்துள்ளும் , காலத்தை கடந்த நிலையிலும் இயங்க வேண்டிய கட்டாயம் உண்டு. ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு சட்டங்கள், பண்புகள் உண்டு. அந்த அந்த நிலைகளில் அதன் தெளிவு பெற்று செய்யவில்லை என்றால், வாழ்வு முரண்பாடுமிக்கதாகத் தோன்றும்.

நாம் பிரார்த்தனை செய்யும் போது அல்லது சமர்ப்பணம் செய்யும் போது அன்னை உயர்ந்த நிலைகளை நமக்கு அளிக்க விரும்புகிறார். ஆனால் அன்னையின் அருளை, அன்னையின் பண்புகளே பெற முடியும் என்பதால், நம் பண்புகளின் அளவே நாம் பெற முடிகிறது. 5 kg பையில் 10 kilo போட முடியாது என்பது போல, பத்து kilo வாங்கச் சென்றாலும் 5 kg-ஏ வாங்க முடியும் என்பது போல - நம்முடைய தாழ்ந்த சுபாவம் ஏதாவது ஒன்று அன்னை தரும் அருளை முழுதும் பெற முடியாமல் தடுத்து விடுகிறது. அந்த

நேரத்தில் வந்த அருள் திரும்ப முடியாது என்பதால், அது பண்புகளை உற்பத்தி செய்ய முற்படுகிறது. அது அகந்தைக்கு எதிரானது என்பதால், நமக்கு வாழ்வில் அது துன்பமாக- முரண்பாடாகத் தெரிகிறது. அதாவது முன்பு சொன்னது போல அகந்தை ஆன்மாவின் வேலையை செய்ய முற்படும் போது – நடைமுறையில் - அது வாழ்வு நம் சுபாவம் மூலம் நம்மை நடத்த முயல்கிறது. நமக்கு - நாம் உயரும் நிலைக்கு ஏற்ப உயர்ச்சித்தம் தேவை. அந்த தேவை எது என்பதை அகந்தையின் பிரிவினை பரிமாணத்தை திசை மாற்றுவதன் மூலமே முடியும்.

பொதுவாக நாம் உயர்ந்தது என்று நினைப்பனவற்றை எல்லாம் உயர் சித்தம் என்று எடுத்துக் கொள்கிறோம். மனசாட்சி, புண்ணியம், பரோபகாரம், உதவி, நடத்தை, மனப்பான்மை என்று எதை எடுத்துக் கொண்டாலும், அது பற்றி அன்னை என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிந்தாலும், நாம் நமக்குக் தெரிந்த நமக்குத் பிடித்த உயர்ந்ததையே எடுத்துக் கொள்கிறோம். அது உயர்சித்தமோ, ஆன்மாவின் பண்போ அல்ல. அது அகந்தையின் அபிப்ராயம். சட்டமும், வாழ்வின் மறுமொழியும் எப்போதும் ஒன்று இல்லை, எல்லோருக்கும் ஒன்றே என்பது இல்லை. நமக்கே கூட ஒரு நிலையில் சரி என்பது அடுத்த நிலையில் சரியில்லை என்றெல்லாம் தெரிந்தால் கூட- அனுபவித்து இருந்தால் கூட - எந்த ஒரு குறிப்பிட்ட தருணத்திலும், சூழலிலும் அகந்தையே -அதன் பிரிவினை மனப்பான்மையே- நம்மை நடத்துகிறது. அப்படி இல்லாமல் உயர்சித்தம் என்ன சொல்கிறது, அல்லது அன்னை என்ன சொல்கிறார் என்னும் இடையறாத கவனம், நம்மை அகந்தையிடமிருந்து மீட்டெடுத்து ஆன்மாவிடம் கொடுக்கும், அகந்தை கரையும்.

அதற்குத் தேவை சுயபரிசோதனை. நம்மை நாமே மூன்றாம் மனிதனாகப் பார்த்தால், நாம் உயர்சித்தம் என்று நினைப்பதெல்லாம் - நாம் நல்லவன் என்று பெயரெடுக்க- பாராட்டை பெற- நம் அந்தஸ்த்தைக் காட்ட-, நம் முக்கியத்துவத்தை காட்ட- , ஒரு பொருளை,அல்லது ஒரு மனிதரை இழந்து விடுவோமோ என்ற பயத்தினால்-, ஒரு உறவை தக்க வைக்க வேண்டிய ஆசையினால்- என்று ஒரு சில விஷயங்களே அகந்தைக்கு அடிப்படையாக இருக்கிறது. அவை அத்தனையும் மூன்று layer - இழைகளுக்குள் அடங்கி விடும். தனி மனித இழை, உறவுகளுக்கான இழை, சமூகத்துக்கான இழை - Individual layer, relationship layer , sociological layer - இந்த கதையில் வருவதைப் போல, பிறர் நிலைப் பார்வை, பரந்த மனப்பான்மை, உதவும் மனப்பான்மை, போன்றவற்றைப் பார்த்தால், நம் ஆன்மீக பண்புகள் என்று நினைத்தவை அகந்தையால் energize செய்யப் படுவது தெரியும். அதனால் தான் நமக்கு வந்த கஷ்டங்களை கவனித்தால், அதன் அடிப்படை அது ஒரு உறவாகவோ,

நாம் உதவியவராகவோ, நாம் நல்லது என்று நினைத்து செய்ததாகவோ, நாம் நம்மை மீறி திருப்திப்படுத்த முனைந்த ஒருவராலோ இருக்கும். இது தவிர தகுதி இல்லாதவர் மேல் இருக்கும் நல்லெண்ணம், நம் நிலைக்குத் தேவையானதை விட அதிக பண்பை எடுத்துக் கொள்ளுதல், வெளிநடத்தையை மட்டுமே எடை போடும்-, உண்மையை கண்ணில் கண்டாலும் , ஏற்றுக் கொள்ளாத – விவேகமிண்மை-, பாகுபாடு இன்மை என்று அனைத்து நிலைகளிலும் நம் அகந்தையே நம் பண்பை energise செய்கிறது. பலனும் அந்த நிலைக்கே வருவதால், ஒரு சமயம் miracle என்னுமளவுக்கு மறுமொழியைத் தரும் ஒரு பண்பு, அடுத்த முறை ஒரு இழையும் நகர்த்துவதில்லை, இதற்கான உதாரணங்களை சென்ற கூடலில் தந்திருக்கிறேன்.

சாப்பாடே இல்லாதவனிடம் நியாயம் பேச முடியாது. உணவுக்காக எதையும் செய்வான். அது ஒரு நிலை. அது போல எல்லா நியாயம், உண்மை என்பதற்கும் அதைப் பிரித்தறியும் அகந்தைக்கும் நிலைகள் உண்டு. தாழ்ந்ததிலிருந்து உயர்ந்ததிற்கு போகும் பாதையில் படிப்படியாகத்தான் செல்ல முடியும். ஒவ்வொரு படிக்கும் ஒரு சட்டம், ஒரு மனப்பாண்மை, நியாயம், சாரம் உண்டு. வார்த்தை தவற மாட்டேன், என்பது போன்றவற்றை, அரசன் என்றால் ஜெயிக்க வேண்டும் என்பது போன்றவற்றை, மனைவி, மக்களை பணயம் வைத்து செய்யக் கூடாது. அந்த நிலைக்கான உயர்ந்தது எதுவோ அதையே பிரித்தறிந்து செய்ய வேண்டும். ஒவ்வொரு செயலுக்கும் அந்த நிலையில் உயர்ந்தது எதுவோ அதை காப்பாற்ற செய்ய வேண்டும். அப்படி செய்யும் விதங்களை மூன்று வகையாக பிரித்துச் சொல்கிறார் கர்மயோகி அவர்கள்.

Infra-Ethical, Ethical, Supra Ethical என்ற மூன்று நிலைகளில் நம்மால் அப்படி அகந்தையிலிருந்து வெளி வரமுடியும். இதற்கான தமிழ் வார்த்தைகள் சரியாக தெரியாததால் அப்படியே தந்து இருக்கிறேன். நம்முடைய, பிடிவாதம், பொறாமை, முன்முடிவுகள், அபிப்ராயங்கள், ஆசைகள், சுயநலம் , சுகத்திற்கான தேர்வுகள் ஆகியவற்றிலிருந்து வெளியே வர முயல்வது Infra Ethical . தனி மனித பண்புகளை பிரித்து அறியும் நிலை.

நம் குடும்பம், சமுதாயம், கலாச்சாரம், பண்பாடு கல்வி ஆகியவை நமக்கு போதித்தவைகளை அதன் உச்சத்தில் கடைபிடிக்க முடிவது ethical - அதாவது social values - சமுதாயத்திற்கான பண்புகளை பிரித்தறியும் நிலை.

அடுத்து Supra Ethical எனது - Supramental values - நமக்கு அன்னை விரும்பும் பண்புகளை பிரித்து அறிந்து செய்வது.

அன்பர்களுக்கு இதை ஒரே வரியில் சொல்லலாம். நம் முன் ஒரு சரி, தவறு என்று இருக்கும் போது, நம் விருப்பம், அன்னை விருப்பம் என்று இருக்கும் போது -, அன்னை விருப்பத்தை மட்டுமே எடுத்துக் கொள்வது என்பது இந்த மூன்றையும் உள்ளடக்கியது என்பதால் அகந்தை ஆன்மாவிடம் சரணடையும் இடம் அது.

இதை கர்மயோகி அவர்கள் yogic common sense - யோகத்திற்கான பொதுப்புத்தி என்கிறார். அதை வாழ்வை, ஆன்மாவால் energize செய்வது என்கிறார்.

உடலால் energize ஆகி செய்வது - உணர்வு energize ஆகி செய்தால், 10 மடங்கு செய்ய முடியும் என்பது நமக்குத் தெரியும். அதையே அறிவு, திறன், பொதுத்திறனுடன் செய்யும் போது 100 மடங்கு நடக்கிறது. இதையெல்லாம் கண்கூடாகப் பார்க்கும் நாம், அதையே ஆன்மா energize செய்தால், பல மடங்கு முன்னேறலாம் என்று தெரிந்தாலும் செய்வதில்லை - என்ற ஒன்றே நாம் எந்த அளவு அகந்தையின் பிடியில் இருக்கிறோம் என்பதைக் காட்டும்.

அதையும் தாண்டி, அன்னை வாழ்வை energize செய்தால், நம் முன்னேற்றத்திற்கு அளவே இல்லை. அங்கு அகந்தைக்கு வேலையே இல்லை. அது ஆன்மீக மனிதனை விட உயர்ந்த நிலை. காரணம் அங்கு நம்மில் எந்த பகுதியும் , செயல்படவில்லை. அன்னையே செய்கிறார். அதில் துன்பத்தை உணரக்கூடிய பகுதிகள் இல்லாததால், அதுவே இடையறாத ஆனந்தம்.

இப்படி அகந்தை கரைவதை நாம் செய்யும் போது , எதையோ இழப்பதாக அல்லது நம்மையே இழப்பதாக நினைக்கிறோம். ஆனால், ஊன்றி கவனித்துப் பார்த்தால் , மழை துளி கடலில் விழுந்து, தன்னை இழந்து விட்டது என்று நினைக்கிறோம். ஆனால் உண்மையில் அது தன்னை விட பெரியதில் கலந்து அதுவாகவே மாறிவிட்டது என்பதே உண்மை. அது போல, நாம் அகந்தையின் பரிமாணங்களிலிருந்து வெளியே வருவது என்பது பெரியதுடன் கலப்பது அல்லது அன்னையில் கரைந்து, அன்னையாகவே மாறுவது.

அடுத்த கூடலில் அடுத்த அத்தியாயத்திற்காக சந்திப்போம்.